ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ, வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19 ] விபவஹு மாசிமீ [ஸஞ்சிகை 5

[illegible]

[illegible]

[ ஸ்ரீ பாகவதம். 1-9-23 ]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

## ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடைய தத்வ விசாரத்தைப்பற்றிய விமர்சம்.

[ஸ்ரீ உப. வித்வாந் த. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர், ந்ருஸிம்ஹபுரம், திருச்சி.]

(ஸஞ்சிகை 4, 118-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

சிலர் பகவத் ஸ்வரூபத்தின் ஏகதேசமே பரஸ்பர போக்த்ருத்வார்த்தமாக ஸ்ரீ ரூபதாரியாக இருப்பதால் பேதாபேத வ்யபதேசத்திற்கும் சேதநத்வ வ்யபதேசத்திற்கும் விரோதமில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களை ப்ரஹ்மத்திற்கு நிரவயவத்வத்தை ப்ரதிபாதிக்கிற ச்ருதிகளால் ஸ்வாமி ஸயுக்திகமாகக் கண்டித்திருக்கிறார். 'நாநாஸீ உபயோ ஹரி:' என்கிற புராண வசநத்திற்கும், அங்குள்ள த்ருஷ்டாந்தத்தை அநுஸரித்து ஸ்வரூப பேதத்திற்கு விரோதமின்றி 'மயட்' ப்ரத்யயத்திற்கு அர்த்தம் சொல்லவேண்டுமென்றும் யுக்தியை உபந்யஸித்திருக்கிறார். சிலர்

ப்ரஹ்மத்தின் ஸ்வரூபைகதேசமே ஸ்வபாவத்தாலாவது பரிணும சக்தியிஞலாவது உபாதி பேதத்தாலாவது வேறுபட்டு ஸ்ரீ என்று சொல்லப்படுகிறதென்று கூறுகின்றனர். ப்ரஹ்மத்துக்கு ஸ்வரூப பரிணுமம் சாரீரக சாஸ்த்ரத்தில் ஒப்புக்கொள்ளப்படாததாலேயே ச்ருதியினுலும் சாஸ்த்ரத்தினுலும் அவர்களை நிராகரித்து உபஹிதாம்ச பக்ஷத்தை ஸ்வாமி பலவாருகத் தூஷித்திருக்கிருர். உபாதியினுல் கவரப்பட்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூபைகதேசமே ஸ்ரீ என்று சொல்லப்படுமேயாஞல், அந்த உபாதி சைதந்யமானது ஸஞ்சரிக்கும்பொழுது அகண்டமான நதீ தீரத்தில் அமிழ்த்தப்பட்ட குடத்திஞல் ஜலத்தின் ஓர் அம்சம் வேறு இடத்தில் இழுக்கப்படுவதுபோல, நிரவயவமான ப்ரஹ்மத்தினிடத்தினின்று ஓரம்சமும் இழுக்கப்படுவதற்கு ஸாத்யப்படாததால் இது அஸங்கதம். கடாசாச ந்யாயத்திஞல் ஸ்ரீ ரூபமான உபாதியானது உபஹிதமான பூர்வ பூர்வாம்சத்தை விட்டு உத்தரோத்தரமாயுள்ள ப்ரஹ்மாம்சத்தை க்ரஹிக்கிறதென்று சொல்லப்படுமேயாகில், போக்தாக்களான அந்தந்த அம்சங்களில்லாமையால் மேல் மேலுள்ள உபஹிதாம்சங்களுக்கு முந்திய அம்சங்களால் அநுபவிக்கப்பட்டுள்ள போகத்தின் ப்ரதிஸந்தாநம் பொருந்தாமல் போகவேண்டி வருவதால், போக்தாக்களுடைய ஸந்ததியின் ஐக்யத்திஞல் போக்த்ரு பேதமிருந்தாலும் ப்ரதிஸந்தாநம் வரக்கூடுமென்று சொல்லப்படுமேயாஞல் பௌத்த மதம் தலை எடுப்பது பற்றி ஸ்திரமான ஆத்மாவை இழக்கவேண்டியதாக ஏற்படுவதால் அத்பந்தம் அநுபபந்நமென்று ஸ்வாமி இந்தப் பக்ஷத்தை நிரஸித்திருக்கிருர். 'உஹயொ நூ தூ ஹெஷமாஸ:' என்கிற ஆபியுக்த வசந பலத்தால் ச்ருதி விருத்தமாக இருக்கிற ஸ்வரூபைக்யம் சொல்லக்கூடாதென்றும் ஸாதித்திருக்கிருர். எந்த இடத்தில் ச்ருதியிஞல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஸ்வரூப பேத விருத்தமாக ஐக்யம் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் 'நாராயணஸ்ரீவயொரைக்யம் தெவெஷ்வம் ஸஜாயத' என்கிற இடத்தில் போல ஐக்யம் நிர்வஹிக்கத்தக்கதென்றும் உபபத்தியை நன்கு எடுத்துக் கூறியிருக்கிருர். மித்யா பூதையான மாயையே ஸ்ரீ என்கிற பக்ஷமும் ப்ரதிக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. 'நாதயொவிஷ்ணுதெ வரம்' இத்யாதி புராண வசநங்களாலும் 'ஸாகுதகவிவொதிதள' முதலிய பகவச்சாஸ்த்ர வசநங்களாலும் இவ்விருவர்க்கும் ஸ்வரூபைக்யம் நிரஸிக்கப்பட்டிருக்கிறது. 'ஸூத்ரஹெதுநிஷ்டஹொ ஹாஷ்யாதிஷு நிராகரூதா: । திவ்யயொஸ்விஹ ஓஉவ்தெவ்யா விஷயொ ஹெது: ப்ரஸாயித: । ஸவெஷாஸாதூநாம் யெஷு ஹிஷாஹிஷகவிஷ்யதெ । ஶூக்ஷூதாராயணெகெ்யாக்தியெஷாம் ஸ்வீராவெக்ஷ்யதெ ॥ யத்ரகவிஷஹெதொக்யஷுவ்யாவஅநெ ஹவெக் । நாராஸ ஸ்ரீவயொரைக்யவிதயாதிவதிஷாஸ்ஹா ॥" என்று ஸ்ரீ தத்வ நிர்ணயத்தை இந்த மூன்று

ச்லோகங்களால் ஸங்க்ரஹித்தார். ஸ்ரீநிகமாந்த தேசிகனைப் போல் இவ்வளவு ப்ரமாணங்களை முன்னிட்டு ஸ்ரீ தத்வத்தை முற்றிலும் கண்ணழிக்க நோக்கமுள்ளவர்களை நிரஸநம் செய்தவர்கள் பூர்வாசார்யர்களில் ஒருவருமில்லை. யுக்தி வாதத்தால் மாத்ரம் இந்தத் தத்வத்தை ஸ்தாபிக்கவில்லை. ச்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களாலும் புராண வசநங்களாலும் ஸ்ரீ தத்வ ஸ்தாபநம் பண்ணி உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்தார். ஜகந் மாதாவான ஸ்ரீ ஸம்பந்த மில்லாவிட்டால் பரமபுருஷனிடம் அணுகுவதோ, அணுகி ஜீவ வர்க்கங்கள் அபவர்க்க பர்யந்தமான அபீஷ்டங்களைப் பெறுவதோ அஸாத்யம். ப்ரதாபோஷ்மளத்வ தண்டதரத்வ ரூப குண விசேஷங்களுடைய ஸாந்நித்யத்தால் சேதந வர்க்கங்களுக்கு நாட முடியாதவனான எம்பெருமானிடத்தில் நித்யவாஸம் செய்யா நின்ற ஸ்ரீதேவியானவள் மாத்ருத்வ ப்ரயுக்த வாத்ஸல்ய விசேஷத்தால் சேதநர்களிடம் கருணை கூர்ந்து ச்ரிய: பதியினிடம் அந்தச் சேதநர்கள் விஷயத்தில் புருஷகாரத்தை வஹித்து அந்தப் பரம புருஷனுடைய சீற்றத்தைத் தணித்துச் சேதநர்களிடத்தில் அநுக்ரஹத்தைச் செய்யும்படி செய்வித்து, ஜகத்தை ரக்ஷிப்பதில் பத்த கங்கணையாக இருப்பவள் ஸ்ரீ தேவி என்பது நிச்சிதமான பொருள். இந்த அர்த்தத்தை ஸ்வாமி,

'ஸுஹ்ருதி ஸஉரஹஉஹெருஷெ வதூள கரதஷியம் ஸ்ரீய: ।
நிமுஹாகீ வாரணம் காமெ ஸஸாஷணஉநமுஹெ ॥'

என்கிற ச்லோகத்தால் ஸங்க்ரஹித்து அநுக்ரஹித்தார்.

மேலும், கைவல்ய விஷயத்தில் அதன் தத்வவிசாரம் ஸ்ரீ ஸ்வாமியினால் விஸ்தாரமாகப் பண்ணப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ந பாஷ்யத்தில், 'ஹொமஃ ஊஹ ஷ்மஉஷ்ராஜஷ்ரிஸவாநஹவஃ, ஷ்ரா ஷ்ராநஷாந ஹவஷ்டு; தஷிநு உக்தவஷஂகெஷிஉவஅரஷி, ந ஹி நிதஷ்ஂ கிளிகீ ஷ்ராஷ்ராநஷஉஷ்ராநஹவரஷவஂ கெவஷ்யஉஷ்தி, " அதாவிஉயா உஉஜ நாஹஷ்டா ஸவ ஹி தெ ப்ரூதாஃ। தெஷாஉகொஷிநஷ்ரெஷ்டாஃ தெ ஜெவாநநஷ்ஜெவதாஃ । ஸுஹஉெவ மதிஷெஷாஂ நிராபீஃ கஉகாரிணாஂ । யெ தஷிஷாஷ்யொஹஷ்டாஃ ஹுகீஉா ஹி தெஉதாஃ। ஸவெஉ அஷ்வநயஉாஉணஃ வ்ருதிபஉஸ்ஷ ஜொக்ஷஹாகஃ । " என்கிற ப்ரமாண வசநங்களால் கைவல்யம் முக்தி சப்த வாச்யமாகா தென்று தாம் திருவுள்ளம்பற்றி, கைவல்யம் முக்தி என்று சொல்பவர்களை ப்ரமாண மாத்ரத்தினால் கண்டித்தா ரென்பதில்லை; யுக்தியினாலும் ஸம்யக் நிரஸநம் செய்தருளினார். அந்த யுக்தி ப்ரதர்சக ச்லோகங்களாவன:—" ஸவஉகஉவிநிஉெஉாஷெ

உ—க்திஹெஷ: கயம் ஹவெக। கஜெ—கஜெஙயொமெ த— ந உ—க்திஹ—உக்தி ஹெஷவக। ந அ கெவரூஷவாஜா—தாக உ—க்திரெஷெதி ய—ஜ்யதெ। ஹா—தஹ—க்திதாதவரு—ாதத தஸ்ய வ—யொமதஃ॥ ''

ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் வேதாந்த சாஸ்த்ரத்தில் தாம் செய்திருக்கும் தத்வ விசாரங்களுக்குள் ஸ்ரீ தத்வ விசாரம் ப்ரசஸ்ததமாயுள்ளது. அடுத்தது கைவல்ய ஸ்வரூப நிரூபணம். இதற்கு மேல் பரதத்வ விசார ப்ரக்ரியை விசாரிக்கத்தக்கது. பரதத்வ நிர்ணயக ப்ரமாணங்களாலும் ந்யாயங்களாலும் ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ர பாஷ்யத்தில் பரதத்வ நிர்ணயம் செய்தருளியிருப்பது அபிஜ்ஞர்களுக்குப் பரம ஆஹ்லாத ஜநகமாக இருக்கிறது. 'நாவெக்ஷஸெ' என்கிற ச்லோகத்தில் பகவானுக்கு ஆச்ரித வாத்ஸல்ய குணத்தை ஸ்தாபியாநின்றுகொண்டும் ஸர்வ சரண்யத்வோபயோகியான ஸர்வஸ்மாத் பரத்வத்தைக் காரண லக்ஷணத்தினால் உபக்ஷேபியாநின்றுகொண்டும் நிஸ்ஸமாப்யதிகமான ஸௌலப்யத்தையும் சொல்லுகிறார் என்கிற அவதாரிகை தத்வவித்துக்களின் ஹ்ருதய கமல ஸமுல்லாஸகரமானது. 'காரணகவம் நியந்த்ரகவம் ஸ—ஹரத்ஸ்வம் ஸ்வாமிதா ஹரெஃ। வாத்ஸல்யமிதி வஞ்ஜுதெ கணொத்கா ஊஹ ஸத்—ணாஃ।' என்று குணபஞ்சகத்தை ஸ்வாமி இந்த ச்லோகத்தில் அழகாக ப்ரதிபாதித்துப் பரத்வ நிர்ணயம் செய்தருளினர். 'தஷெக்ஷத', 'ஸொட்காரயத', 'யதொவா உ—நி ஹூதாநி', 'கொஹெ்யவா—யாக கஃ வ—ாணயாக யதெஷ ஆகாஸ ஆநநெொ ந ஸ்யாக', 'யொ ஸ்ரஹ்மாணம்', 'ஸ ஸகாக்கீ ந ரஸெத', 'ஸ்வாஹாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' 'ஸவ—உஸ்ய வ—ஹ—ஜீஸாநம் ஸவ—உஸ்ய ஸா—ணம் ஸ—ஹரக', 'பதிம் விஸ்வஸ்யாத்மேஸ்வரம்', 'ஸ காரணம் கரணாதிபாதிபஃ' இத்யாதி ச்ருதி ப்ரமாணங்களால் விவக்ஷிதங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 'ஸ்வாஹாவிகாநவதிக' என்கிற ச்லோகத்தில் ஸ்ரீ தேசிகன் பரமாத்மாவுக்கு ஸர்வஸ்மாத்பரத்வத்தை நன்கு ஸ்தாபித்திருக்கிறார். 'ஊநொ—ா உஸயாஹிஃ வ—ஷ—ஸுவ ஸயதெ', 'யம் காமம் காமயதெ ஸொஹஸ்ய ஸஜக்வஸெவ ஸஉ—திஷ்டதி', 'வராஹஸ்ய ஸகித்விஉவிஸெவ', 'வ—ஸாவிதாரம் ஸவெஉஷாம்', 'ஸாஹஸ்ர விஷ்ண—ஸஸெஷஸ்ய', 'உத்தஃ வரதரம் நாநயக', 'ஸஷ யாதா விதாதா ச', 'ஆஸீத்ஹம் தஸொஹிதம்', 'ஆஸொ நாரா ஊதி ஜெப்ராக்தாஃ', 'நாராயணஃ வஸொட்வஸ்த்தாக', 'யஜாயெஹாராயணம் ஷெவம்', 'ஆஹொஸ்ய ஸவ—உஸாஸ்த்ராணி', 'ஸவெ—உ வெஷா யத்வுஉா—உநந்தி', 'வெஷெஷு ஸவெ—உரஹ ஷெவ வெஷ்யஃ', 'வெஷெ நாராயணெ ஷெவ', 'நாராயணவரா வெஷாஃ', 'வெஷெஃ வஸ்யந்தி ஸ்ராஹ்மணாஃ'

'வேதவேத்யோ ஹி பகவாந்', 'நாராயணம் பரித்யஜ்ய ஹ்ருதிஸ்தம் ப்ரபுமீச்வரம்' இவை முதலிய பஹுஸூத ச்ருதி ப்ரமாணங்களாலும் ஸ்ம்ருதி வசந ப்ரமாணங்களாலும் பரதத்வ நிர்ணயம் செய்திருப்பது ஆச்சர்யகரமானது. 'க: ஸ்ரீ: ஸ்ரிய:' என்கிற ச்லோகத்தில், 'பகவாநிதி சப்தோऽயம் ததா புருஷ இத்யபி। நிருபாதீ ச வர்த்தேதே வாஸுதேவே ஸநாதநே" என்கிற ப்ரமாண வசநாநுஸாரணத்தினால் 'புருஷ' சப்தம் ஸ்ரீமந் நாராயணனிடம் யோக ரூட மென்று நிச்சயித்து, மஹேச்வர சிவாதி சப்த லிங்கங்களுடன் கூடின ச்வேதாச்வதர உபநிஷத்தில் 'வேதாஹமேதம் புருஷம்' என்கிற வாக்யம் காணப்படுவதால் ருத்ரனிடத்திலும் 'புருஷ' சப்த ப்ரயோக மிருப்பதால் புருஷ ஸூக்தம் ருத்ரபர மென்கிற சங்கை வர, 'பர: ஸத்வஸமாச்ரய: க:' 'பரம்' மோக்ஷோபயுக்த ப்ரகர்ஷமுள்ள 'ஸத்வ' ப்ரகாச ஸுக ஹேது பூதமான குணவிசேஷத்திற்கு 'ஸமாச்ரய:' ஸம்யக் ப்ரவர்த்தகன் உன்னைத் தவிர்த்து வேறு யார் இருக்கிறானென்று மோக்ஷோபயுக்த ப்ரகாச ஸுக ஹேது பூதமான குண விசேஷ ப்ரவர்த்தகத்வ ரூபமான அஸாதாரண குணத்தினால் ருத்ரன் ப்ரஹ்மா இவர்களை விலக்கி நாராயணனே புருஷசப்த வாச்யன், புருஷஸூக்த ப்ரதிபாத்ய னென்று ஸாதித்தார்.

இந்த இடத்தில் ஸ்ரீ தேசிகன் 'அயம் பாவ:' என்று தொடங்கி, 'புருஷஸூக்தம் தாவத் பரமபுருஷவிஷயதயா ஸ்தாபிதம்। தத்ரத்யவாக்யப்ரத்யபிஜ்ஞாநாதேவ ச்வேதாச்வதரோபநிஷதி சிவசம்ப்வாதி சப்தாநாமபி பரமபுருஷபரத்வமேவ யுக்தம்। அதஸ்த்வயாபி ஸந்து இஹ தத்ர தத்ரோபவர்ண்யதே; "ஸமாத் ப்ரஹ்மவேத புருஷ: ஸத்வ ப்ரவர்த்தக:", இதி நாராயணஸ்யைவ ஸத்வப்ரவர்த்தகத்வம் ப்ரஹ்மருத்ரயோஸ்து ரஜஸ்தம:ப்ரவர்த்தகத்வம் ச்ருத்யாதிப்ரஸித்தம்। யதா மைத்ராயணீயோபநிஷதி, "அத யோ ஹ கலு வா அஸ்ய ராஜஸோம்ச: ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோ யோயம் ப்ரஹ்மா, அத யோ ஹ கலு வா அஸ்ய ஸாத்விகோம்ச: ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோ யோயம் விஷ்ணு:, அத யோ ஹ கலு வா அஸ்ய தாமஸோம்ச: ஸோஸௌ ப்ரஹ்மசாரிணோ யோயம் ருத்ர:"; இதி। புராணே ச வாராஹே, அகஸ்த்யருத்ரஸம்வாதே ருத்ர:, 'யத்ஸத்வம் ஸ ஹரிர்தேவோ யோ ஹரிஸ்தத்பரம் பதம்। ஸத்வம் ரஜஸ்தமச்சேதி த்ரயமேதத்ப்ரகீர்த்யதே। ஸத்வேந முச்யதே ஜந்து: ஸத்வம் நாராயணாத்மகம்। ரஜஸா ஸத்வயுக்தேந பவேச்ச்ரீமாந் யசோதிக:। தச்ச வேதாத்மகம் ப்ரோக்தம் ஸர்வசாஸ்த்ரேஷு பண்யதே। யத்வேதபாஹ்யம் கர்ம ஸ்யாத் காம்யமித்யபிதீயதே। தத்ரைவ ச ருசிர் விப்ராணாம் கநிஷ்டமிதம் தரணம்। யஜ்ஞதபஸா யுக்தம் கேவலம் தாமஸம் ததா। த்ரைகாலிகப்ரதம்

[illegible] ॥ என்கிற ப்ரமாண ஜாலங்களால் ஸ்ரீமந்நாராயணனே பரதத்வ மென்று ஸ்தாபித்திருப்பது ஸ்வாமியின் நிரூபண சக்தியை ஸம்யக் ப்ரகாசப்படுத்துகிறது. '[illegible]' என்கிற வசனத்தின்படி எல்லா சாஸ்த்ரங்களிலிருந்தும் ஸாரார்த்த க்ரஹணம் பண்ணி ஸ்வாபிமதார்த்த நிர்த்தாரணம் செய்வதில் ஸ்ரீ ஸ்வாமியின் சக்தி அவாங் மநஸ கோசரம் என்பதில் கற்றுணர்ந்த மஹான்களுக்கு ஸம்சயமிராது. '[illegible]' என்கிற ச்லோகத்தில், [illegible]' என்று அநந்யதா ஸித்தங்களான ப்ரமாண ரத்நங்களால் பரம புருஷனுக்கே ப்ரதிபுத்த ஸேவ்யத்வமும் முமுக்ஷூபாஸ்யத்வமும் ஸர்வ ஸமாச்ரயணீயத்வமும் ஸ்வாமியினால் உபந்யஸிக்கப்பட்டிருக்கின்றன. பிறகு இந்த ச்லோகத்திலேயே பாஷ்யத்தில் '[illegible]' என்று ஆக்ஷேபித்து, '[illegible]' என்று உபக்ரமித்து, '[illegible]' என்கிற க்ரந்தத்தினால் அஞ்ஜலிக்கு இரண்டு ப்ரகாரங்களால் பரம்பரையாக மோக்ஷ ஸாதநத்வத்தைச் சொல்லி அதிவாதத்தைக் கண்டித்து பக்திக்கோ ப்ரபத்திக்கோ இரண்டில் ஒன்றுக்கே ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதநத்வத்தையும் ஸ்தாபித்திருக்கிறார். பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தில் ஆத்மைக்யம் முதலியவற்றைச் சொல்லுகிற யாதவ மதம் முதலியவைகளை ப்ரமாண பலத்

தால் நிராகரித்து, பரதேவதா விசேஷ நிச்சய மில்லாவிடில் பரமைகாந்தித்வம் கூடாமையாலும், பரமைகாந்திக்கல்லது வ்யவதாந ரஹிதமான மோக்ஷம் கிடையாமையாலும், ஈச்வரன் இன்ன தேவதா விசேஷ மென்று நிஷ்கர்ஷிக்க வேணும் என்று தொடங்கி, கார்யத்வம் கர்ம வச்யத்வம் பகவந் மாயா பரதந்த்ரத்வம் ஜ்ஞாந ஸங்கோச விகாஸவத்வம் பகவத் விபூதித்வம் பகவந் நியோஜ்யத்வம் முதலிய குணங்களிருப்பதால் ப்ரஹ்மா ருத்ரன் முதலிய தேவதைகளெல்லாம் புருஷசப்த வாச்யனான ஸ்ரீமந்நாராயணனைக் காட்டிலும் நிக்ருஷ்டர்களென்றும், நிச்ரேயஸ மென்கிற மோக்ஷத்தைக் கொடுக்கும் திறமை வாய்ந்தவனாக இருப்பதாலும் முக்தாத்மாக்களால் அநுபவிக்கத் தக்கபரம ப்ராப்ய வஸ்துவாக இருப்பதாலும் ஸ்ரீமந் நாராயணனே பரதேவதை என்றும் ந்யாயாநுக்ருஹீத ப்ரமாணங்களால் ஸ்வாமி ஸ்தாபித்திருப்பது ப்ரமாண சரணர்களின் மாநஸோல்லாஸகரமாக இருக்கிறது. முமுக்ஷுத்வாதிகாரத்தில் நிவ்ருத்தி தர்மிங்களிலே ப்ரவ்ருத்தரானவர்கள் முமுக்ஷுக்களான அதிகாரிகள் பராவரங்களான தத்வங்களும் புருஷார்த்தங்களும் தெளிந்தாலும் இப்படி வைராக்ய பூர்வகமாக பரமபுருஷார்த்த உபாயாநுஷ்டாநத்தில் ப்ரவ்ருத்தியானுகில் 'பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந்நாஸ்த்யக்ருத: க்ருதேந। தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்கிற ச்ருத பலத்தை இழந்து 'நாத்யாபயதி கஞ்சிந்ந சாப்யதீதே ந ச ஶாஸ்த்ரஸங்க்ராவஹம்। ப்ரமாதி வாக்ஸிவாநயோ வாணிஜ்யம் யச்சவர்ஜிதம்।' என்கிறபடியே ஹாஸ்யனும்' என்கிற ஸந்தர்ப்பத்தினுல் சாஸ்த்ரங்களின் பயிற்சிக்கு முக்ய பலமாக இருக்கிற சமதமாதிக ளில்லாவிட்டால் மநுஷ்யன் பரிஹஸிக்கத்தக்கவனுவான் என்று சொல்லி, உலகத்தில் அபிஜ்ஞர்க ளிருக்க வேண்டிய ப்ரகாரத்தையும் 'வயஸ: கர்மணோ(அ)ர்த்தஸ்ய ச்ருதஸ்யாபிஜநஸ்ய ச। வேஷவாக்புத்திஸாரூப்யமாசரந் விசரேதிஹ।' என்று பரம கருணையினுல் அருளிச்செய்திருக்கிறுர். இந்த மஹநீயமான உபதேசத்தை ஸ்வாமி ஸ்ரீ தேசிகனைப்போல் யார் செய்திருக்கிறுர்கள்?

மேலும், ரஹஸ்யத்ரயத்தில் ஸ்வாமி செய்தருளியிருக்கிற தத்வ நிருபணம் அத்யாச்சர்யகரமா யுள்ளது. திருவஷ்டாக்ஷரம் தாரக மென்றும் சரம ச்லோகமானது போஷக மென்றும் த்வய மந்த்ரம் போக்ய மென்றும், முறையே இவைகள் ஜ்ஞாநாநுஷ்டாந பல நிதாநங்க ளென்றும், இவைகளுக்கு அதிகார ஸம்பாதகத்வம் விதாயகத்வம் அநுஷ்டாபகத்வம் நிஸர்க்க ஸித்தங்களென்றும், இந்த மூன்றும் பகவந் மந்த்ரங்களுக்குள் ச்ரைஷ்ட்யம் பெற்றிருக்கிற வ்யாபக மந்த்ரங்களென்றும், இவைகளுக்குள் மூல மந்த்ரமானது ஸர்வோத்க்ருஷ்ட மென்றும், ஆதர்வண கடாதி உபநிஷத்துக்களிலும் மந்வாதி சாஸ்த்ரங்களிலும் நாராயணுத்மக ஹைரண்ய கர்ப்ப நாரதீய போதாயநாதி பஹுவித கல்பங்களிலும் ஸுப்ரஸித்த

மென்றும், ஸர்வ வர்ணங்களுக்கும் தந்தாம் அதிகாரானுகுணமாக வைதிக ரூபத்தாலும் தாந்த்ரிக ரூபத்தாலும் உபஜீவ்ய மென்றும், ஸ்ரீ ஸ்வாமி அருளிச் செய்திருக்கிறார்.

சாரீரக சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களையும் ப்ராப்ய ப்ரஹ்ம ஸ்வரூபம் முதலிய அர்த்த பஞ்சகத்தையும் இந்தத் திருமந்த்ரத்தில் ஸ்வாமி அந்தர்க்கதங்களாகச் செய்து, அந்தந்த அர்த்த விசேஷங்களை ஸ்பஷ்டமாக ஆங்காங்கு நிரூபித்து, பிறகு திருமந்த்ரம் ஏக வாக்ய மானபோது உபாயபர மென்றும் வ்ருத்திபர மென்றும், வாக்யத்வய மானபோது ஸ்வரூப பர மென்றும், அந்வய வ்யதிரேக முகேந ஸமர்ப்பண பர மென்றும், புருஷார்த்த ப்ரார்த்தநாபர மென்றும், ப்ரணவம் ஸ்வரூபபரமாய் மேலே இரண்டு பதமும் அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்டப்ராப்தி ப்ரார்த்தநா பரமென்றும், ப்ரதமபதம் ஸ்வரூபபரமாய் மேலிரண்டுபதமும் உபாயபரமென்றும், ப்ரதமபதம் ஸமர்ப்பண பரமாய் மேலிரண்டுபதமும் பல ப்ரார்த்தநாபர மென்றும், பதத்ரயமும் முறையே தத்வோபாய புருஷார்த்த ப்ரார்த்தநாபர மென்றும், அநந்தார்த்த கர்ப்பமான இந்தத் திருமந்த்ரத்தில் பத்து விதமாக வாக்யார்த்தத்தை அநுஸந்திக்கும்படி ஸத் ஸம்ப்ரதாயத்தை முன்னிட்டு ஸ்வாமி அதிரமணீயமான சாரீக சாஸ்த்ரார்த்தத்தை அநாயாஸேந எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி கருணை கூர்ந்து ஸப்ரமாணங்களான திவ்ய ஸூக்திகளை அநுக்ரஹித்திருக்கிறார்.

அஜ்ஞாநாந்தகாரத்தில் அமிழ்ந்திருக்கிற ஜநங்களுக்கு ஜ்ஞாந ஸூர்யோதயத்தால் ப்ரபோத ப்ரகாச தாதாக்களாக அத்யாபி ஜ்வலித்துக் கொண்டிருக்கிற க்ரந்தங்களாலும் யசஸ்ஸரீரத்தாலும் தேதீப்யமாந திவ்ய ஸ்வரூபத்துடன் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய தத்வ விசார பரிபாடியை விஷயீகரித்துப் பரிமித ப்ரஜ்ஞனான தாஸன் சாபல்யத்தாலும் பாகவத நியமநம் என்கிற உத்ஸாஹத்தினாலும் இந்த வ்யாஸத்தை எழுதலானேன். [illegible] தோஷங்கள் க்ஷமிக்கத் தக்கவைகளென்று [illegible]॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

105

ஸ்ரீ:

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ ஸ்ரீ. உப. வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர் திருச்சி. ]

(ஸஞ்சிகை 4 பக்கம் 105 தொடர்ச்சி.)

" ஸர்வத்ர பரிஶிஷ்யதே ஶமிதசித்தவேதோ ரஸ: ". எப்படி கட வல்லியில் அவ்யக்த சப்தத்தால் பரிசேஷ ந்யாயத்தால் சரீரம் என்று கிடைக்கிறதோ, அப்படியே இங்கே மற்ற ரஸங்களை ஒவ்வொன்றாயெடுத்து அதது ரஸமல்லவென்று தள்ளி, உயிரான சாந்தி ரஸமொன்றே ரஸமென மிகுதியாகிறது என்கிறார். இது சேஷி ரஸம். மற்ற ரஸங்கள் இந்த சேஷியான சாந்தி ரஸத்திற்குச் சேஷமான ரஸங்களென்றும் இங்கே த்வநிக்கிறது. " பரிஶிஷ்யதே " என்கிற பதத்தால், " ஸவாஸநேக: ஶிஷ்யதே ஶேஷஸஂஜ்ஞ: " என்கிற சுகவசநம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. அங்கே எப்படி சேஷியான பகவான் மிகுதியாகிறாரோ, அப்படியே இங்கே மற்ற ரஸங்களெல்லாம் சேஷியான சாந்தி ரஸத்தில் ப்ரலீநமாகி சேஷி ரஸமே மிகுந்து நிற்கிறது. சம ரஸமொன்றே நிஜமான ரஸ மென்பதற்கு அபேக்ஷ்யமான யுக்தி கூறப்படுகிறது. "ஶமிதசித்தவேதோ ரஸ:" என்று சமமொன்று தான் சமநம் செய்யக் கூடுமென்று வேடிக்கையாய்க் காட்டப்படுகிறது. சமமல்லாதது எப்படி சமநம் செய்யக்கூடும்? இவ்விஷயத்தில் " அஶாந்தஸ்ய குத: ஸுகம் " என்கிற பகவத் வாக்யம் ஸ்மரிப்பிக்கப்படுகிறது. ஸுகமயமாக இருக்க வேண்டும் ரஸம். சாந்தியில்லாமல் ஸுகமில்லை என்பது ப்ரஸித்தம். "சாந்தமு லேக ஸௌக்யமு லேது " என்கிறார் ரஸாநுபவ நிதியான த்யாகய்யர். சித்தத்தில் ரஸம் ஆவிர்ப்பவிக்க வேண்டும். ச்ரம லேசமுமில்லாமலிருந்தால் மட்டும் வாஸ்தவமாய் ரஸாநுபவம் உண்டாகும் என்று சொல்லலாம். மற்ற ரஸங்கள் கேதத்தை அடியோடு நிவர்த்திக்க மாட்டா. சேஷியான ப்ரம்ஹத்தின் ரஸமாகிய சாந்தி ரஸம், சேஷி ரஸமாக வேண்டியது ந்யாயம். சேஷி பரிஸங்க்யை, சேஷ பரிஸங்க்யை என்று விபாகம் செய்வர் மீமாம்ஸகர். அது போல் இங்கே சேஷி ரஸ மென்றும், சேஷ ரஸ மென்றும் விபாகம் கொள்ள வேண்டுமென்று த்வநியினால் காட்டப்படுகிறது. சேஷி என்பது அங்கி ; சேஷம் அங்கம்.

'சாந்தி ரஸம் ரஸமாகுமா?' என்கிற ஒரு ஆக்ஷேபம் இப்போது பரிஹரிக்கப்பட்டது. நாடகம் எழுத வேண்டியதற்கு அவச்யமான வாங்மநோ சாதுர்யம் இவருக்கு இருக்குமோ வென்கிற சங்கையும் தீர்ந்தது. எப்பொ

ழுதும் நிவ்ருத்தி மார்க்கத்திலேயே ரமிக்கும் இவர் நாடகம் செய்வதென்கிற விக்ஷேபத்தில் எப்படி ப்ரவ்ருத்திப்பாரென்னும் ஆக்ஷேபத்தை இனித்தீர்க்க வேண்டும். மேலும் இந்த ரஸம் நிவ்ருத்தர்களுக்கே பிடிக்கும். நிவ்ருத்தர்கள் நாடகம் பார்க்கும் ப்ரவ்ருத்தியில் இறங்கமாட்டார்கள். நாடகமென்பது த்ருச்ய காவ்யம், அது "ஜநஸ்ய ஸமாராதநம்" என்று ஸர்வ ஜநங்களுக்கும் ஸந்தோஷகரமாக வேண்டும். 'எல்லாரையும் ரஞ்ஜிக்கும்படி மற்ற ரஸங்களையும் அங்கங்கே வேடிக்கையாய் ஒன்றுசேர்த்துப் பெரிய நாடகமாக எழுதுவதற்கு உமக்கு எங்கே அவகாசம்? மோக்ஷ ரஸம் எப்படி ஸந்யாஸியல்லாதாருக்குப் பிடிக்கும்? அதைப் பார்த்து க்ருஹஸ்தர் முதலியவர்கள் எப்படிக் களிப்பார்கள்? அவர்களுக்கு இந்த ரஸத்தில் அதிகாரமே கிடையாதே!' என்னும் இந்தக் கேள்விகளுக்கு ஸமாதாநம் கூறப்படுகிறது. 'நாங்கள் கர்மத்தை அடியோடுவிட வேண்டுமென்று சொல்லுகிறவர்களல்லோம்; ஸந்யாஸிகளுக்கு மட்டுமே மோக்ஷத்திற்கும் சாந்திரஸத்திற்கும் அதிகாரம் உண்டு என்கிற கொள்கை உடையவர்களுமல்லோம். காமம் நீங்கிய கர்மங்களெல்லாம் எங்களுக்கு நிவ்ருத்தி தர்மமாகும். ஸர்வ ஜநங்களுக்கும் சாந்தி ரஸத்தைக் காட்டலாம், எல்லோருடைய மநஸ்ஸிலும் சாந்தி ரஸம் புகுந்து நர்த்தநம் செய்யலாம்: எனக்கும், நிவ்ருத்தி தர்மத்தையும் நிவ்ருத்தி ரஸமான சாந்தி ரஸத்தை விஸ்தாரமாய் உபபாதநம் செய்யும் நாடகத்தையும் நிர்மாணம் செய்ய அவகாச முண்டு. வேதாந்த நாடகத்தைப் பார்த்து ரஸிக்கவும் அவகாச முண்டு. த்யாகம் என்பதற்கு, ஸந்யாஸ ஆச்ரமத்தைக் கைக்கொண்டு கர்மத்தை அடியோடு விட்டு விடுகிறதென்கிற அர்த்தமில்லை. கர்மபல த்யாகம் தான் ஸாத்விக த்யாகம் என்று கீதையில் கடைசி அத்யாயத்தில் பகவான் கூறியிருக்கிறார்.' "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதனால் ஸகல தர்மங்களையும் அவதூநநம் செய்தால் தான் அவதூதர் என்கிற பிருது கிடைக்கும் என்பவர்கள் கொள்கை போலும் என்று வேடிக்கையில் நோக்கு. அவதூத காமர்களுக்கு அந்தப் பெயர் தகும். 'நிசமயத நிசாமயத வா' என்பதனால் நிசமநம் என்கிற பெரியோர்களிடம் கேட்கும் வ்யாபாரம், நீண்டால் நிசாமநம் என்கிற தர்சநம் போல் தெளிவுண்டாகுமென்று த்வநிக்கிறது. நிசமநம் நீண்டால் நிசாமநம் வரும் என்பதில் என்ன ஸந்தேஹம்? ஸம்ஸ்க்ருத பாஷையின் கௌரவத்தைப்பாருங்கள். பதங்களில் ஒரு உயிரெழுத்தை நீட்டுவதால் இந்தத் தத்வம் கிடைக்கிறது. "ந தஸ்ய" என்கிற ச்லோகம் ப்ராயேண இதே மாதிரியாக பரத சாஸ்த்ரத்தி லிருக்கிறது. அதனால் தான் "ஜயதே ஹி" என்று ஆரம்பித்து அந்த ச்லோகம் கூறப்படுகிறது. "நாட்யஸ்ய ஸர்வ ஜகதே" என்று அங்கேயிருப்பது இங்கே 'நாடகே' என்று மாறி இருக்கிறது. 'ஸஹிந' என்று அங்குள்ள பதம் 'நாடகேஷ்விஹ' என்று பின் ச்லோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது, நாடகத்திற்கு எல்லா சாஸ்த்ரங்

களும் வித்யைகளும் சில்பமும் கலைகளும் யோகமும் ஜ்ஞானமும் வேண்டும். நாடகத்தில் இவ்வளவையும் பார்க்கலாம். நாடகம் செய்ய வேண்டியதற்கு வேண்டிய வித்யா ஸம்பத் தமக்குளதென்று "விஷ்யாவாவஹியிரவஹித:" என்று பின்னால் சொல்லப்போகிறார்.

இவ்வளவு தூரம் ஸமாதானங்கள் சொல்லி ஆக்ஷேபங்களைப் பரிஹரித்தும் புதிதாய் நடிக்கு ஒரு பயம் உண்டாகிறது. பண்டிதர்களிடமிருந்து அஸூயை யென்னும் ஒரு பெண் பிள்ளையின் ப்ரபாவத்தால் நடி பயப்படுகிறாள். 'அஞ்சலஞ்சல்' என்கிறார் ஸூத்ரதாரர். இந்த நாடகத்தில் பண்டிதர்கள் தூஷிக்க இடமே அகப்படாது. ஸர்வ லக்ஷணங்களாலும் பூர்ணம் இந்த நாடகம். ஒரு லக்ஷணமாவது இங்கே பழுதில்லை, இதில் ரஸ புஷ்டி நிரம்பியிருக்கிறது. அது ஸஹ்ருதயர்களுக்கு நன்றாய் அநுபவத்திற்குவரும். நடர்கள் பண்ணிய புண்யத்தால் இப்படி எல்லாம் அமைந்திருக்கிறது. நாடகம் ஏற்படுத்தும் கவி வித்யா ஸம்பத்துக்கு நிதி. வேறு தநத்தை அடியோடு துறந்தவரானாலும் வித்யாதநம் இவரிடம் நிதிபோலுள்ளது. வித்யைய என்பது ஸர்வ தந்த்ரங்களுக்கும் உபலக்ஷணம். நிரம்பவும் சவநமாய் ஏதொரு குற்றமும் நேராதபடி அவதானமாயிருப்பவர். நடர்களான நம்மைச் சேர்ந்தவர்கள் வெகு காலமாய் அபிநயத்தில் தேர்ந்தவர்கள். இதனால் நடர்கள் அரையர் குலத்தாரிடம் நன்றாய்ச் சிக்ஷை பெற்றவர்களென்று தெரியவருகிறது. பண்டிதர்கள் அஸூயைக்கு என்ன பரிஹாரம் என்று சங்கித்ததற்கு, 'இந்த ஸபை அபிஜ்ஞர்களால் நிறைந்தது; பக்ஷபாத மொன்று மட்டில் இவர்கள் அநபிஜ்ஞர்கள்' என்று வேடிக்கையாய்க் கூறப்படுகிறது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், இங்கே ரங்கமே ரங்க பூமியாகிறது. இங்கே க்ருத்ரிமமாக ரங்கம் ஏற்படவில்லை. நிஸர்க்க ஸித்தமான ரங்கமே ரங்கமாகிறது. ராமன் முதலியவர்களுக்குக் குலதநம் இந்த ரங்கம். ராமனும் ஒரு வேஷதாரியான சைலூஷன் தான். அதனால் இது, ராமன் என்கிற பெரிய சைலூஷனுக்குச் சொந்தமான ப்ராசீநமான ரங்கம்; சக்ரவர்த்தித் திருமகனுக்குக் குலதநமான ரங்கம். சைலூஷர்களான நம்முடைய கூடஸ்தரான ராமனுடைய குலதனம். 'ஆதி' பதம் விபீஷணாழ்வானையும் ஆளவந்தார் முதலியவர்களையும் சொல்லுகிறது .குல தநத்தை அடைந்தென்று பொதுவாய்ச் சொல்லப்பட்டதற்கு, 'கொடுத்தவருக்கும் குல தநமாகும்; வாங்கினவருக்கும் குலதநமாகும்' என்பது பொருள் ஆனது பற்றி, 'எம்முடைய குலதநம்' என்றார் ஆளவந்தார். ரங்கநாதனுடைய பாதாரவிந்தத்தைப் பண்டிதர்கள் கொண்டாடுவார்களா அல்லது தூஷிப்பார்களாவென்று நாம் ஏன் கவலைப் படவேண்டும்? நாடக கர்த்தாவான கவி எப்படி வித்யாநிதியோ, எப்படி சம நிதியோ, அப்படியே அவர் இயற்றிய நாடகமும் சம தந நிதி. இதை ஸ்தோத்ரம் செய்வதும் தூஷிப்பதும் அவரவர்கள் சொந்த குணத்தைப் பொறுத்தது. நம்முடைய நாடகத்தின் குணதோஷங்களை ஸப்யர்கள் பரீக்ஷிக்க வேண்டுமென்று நாமேன் நினைக்க வேண்டும்? இந்த நாடகத்தைப் பார்ப்பதால் அவர்களுடைய சொந்த குணத்திற்குப் பரீக்ஷை ஏற்படுகிறதென்று நாம் நினைக்கலாம். பெரியோர்களும் நம்மைப் பெரியோர்களாக நினைக்கும் நம்முடைய ஜ்ஞாந ஸந்தாநமும் ஸந்தோஷிப்பார்களென்று நாடக முடிவில் கூறப்படுகிறது.

(தொடரும்.)

108

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஒரு விபரீத கைங்கர்யம்

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

திருக்கோட்டியூர், பாண்டிய நாட்டுத் திவ்ய தேசங்களுள் சிறந்த தொன்று என்பது அனைவரும் அறிந்ததே. விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரான எம்பெருமானர், நம்பிகளிடம் பதினேழுமுறை சென்றும் பயனின்றி, பதினெட்டாவது முறையில் மந்த்ரோபதேசம் பெற்றதும் கோஷ்டீ புரத்திலே. உடையவரது திருவுள்ள உகப்பிற் கிடமாயமைந்த ஸ்தலங்களுள், கோஷ்டீபுரம் அதிக முக்யமாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த அத்திவ்ய தேசத்தில், பழைய காலத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டுப் பற்பல பெரியோர்களாலும் ஆராதிக்கப்பட்டு வந்துள்ள உடையவர் விக்ரகம், ஆஸ்தானத்தினின்றும் ஒருவரால் வெளியில் எழுந்தருளப்பண்ண முடியாதவாறு பெரிய திருமேனியுடையதாக எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கிறது. கைங்கர்யத்தில் மிக்க விருப்பமுடையவரும் உடையவரிடம் மிக்க பக்தியுடையவருமான ஏகாங்கி ஒருவர், அவ்விக்ரஹத்திற்கு கவசம் முதலியவற்றைச் செய்வித்துச் சாத்தவும், அச்சந்நிதிக்கு விமானம் கட்டவும் மூவாயிர ரூபாய்க்கு மேல் பல விடங்களிலும் வசூல் செய்து, தாம் வட நாட்டுத் திவ்ய தேச யாத்திரையாகச் செல்ல சேர்ந்தபடியால், அக்கைங்கர்யங்களைச் சரிவரச் செய்து முடிக்குமாறு, திருக்கோட்டியூரிலுள்ள ஒரு ஸ்வாமியிடம் அத்தொகையை ஒப்புவித்துச் சென்றிருந்தார். அவ்வேகாங்கிகள், தமது யாத்ரையை முடித்துக்கொண்டு, மீண்டு வந்து அந்த ஸ்வாமியை வினவவே, புதிதாக ஒரு உடையவர் விக்ரஹத்தைச் சிறியதாகச் செய்வித்துப் பிரதிஷ்டை செய்து அதற்கே கவசம் முதலியவற்றைச் செய்விக்கப் போவதாகவும், பல வருடங்களாகத் திருவாராதனத்தில் எழுந்தருளப் பண்ணப்பட்டு வந்திருக்கும் பழைய விக்ரஹத்தை திருவாராதனத்திலிருந்து எடுத்து விடப்போவதாகவும், அவ்வாறு செய்து முடிக்க அத்தேவஸ்தான தர்மகர்த்தரிடம் அனுமதியும் பெற்றுவிட்டதாகவும் பணம் பெற்றுக்கொண்ட ஸ்வாமி பதில் கூறிவிட்டார்.

பகவத் ராமாநுஜ ஸித்தாந்திகளே! ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களே! அந்தோ! காலத்தின் கோலத்தை என்னென்பது! ஷெ ஸ்வாமிகளின் விபரீத புத்தி இருந்தவாறு என்னே! தர்மம் செய்வதைவிட, அத்தர்மத்தைக் குறைவற நடைபெறச் செய்யும் நிர்வாஹத்தை வகிப்பதே பெரிதாகும். ஒரு விக்ரஹம் எவ்வளவுக்கெவ்வளவு பழமையானதோ, அவ்வளவுக்கவ்வளவு அதி மாஹாத்ம்யம் பெற்றிருக்கு மென்பதில் என்ன ஸந்தேஹம்? மற்றும், முற்காலத்தில் விளங்கிய சிற்பிகளின் அற்புதத் திறமை இக்காலத்தில் உண்டோ? மேலும், அத்திருமேனி, பற்பல பக்தர்களாலும் ஸ்வாமிகளாலும் மங்களாசாஸனம் செய்யப்பட்டு வந்திருக்கவேண்டும். ஷெ உடையவர் விக்ரஹம், பற்பல வருடகாலமாகப் பற்பல பட்டர்களால சாஸ்த்ரோக்தமாக ஆராதிக்கப்பட்டு, மிக்க சக்தி பெற்றிருக்குமென்பதில் ஐயமும் உண்டோ? அத்திவ்ய சக்தியும் மஹாத்ம்யமும், இனி நூதனமாகச் செய்விக்கப்பட்டு ப்ரதிஷ்டிப்பிக்கப்படும் சிறு விக்ரஹத்திற்கு உண்டாய் விடுமோ? வைகாநஸ ஆகமத்தில் இத்தகைய நூதன ப்ரதிஷ்டைக்கு ஆதாரவுண்டோ?

தற்காலத்தில் பற்பல ஸந்நிதிகளை நூதனமாகக் கட்டுபவர்கள் புதிதாகப் பிரதிஷ்டைசெய்து எழுந்தருளப்பண்ணியிருக்கும் உடையவர் விக்ரகங்கட்கும், திருமந்த்ரோபதேசம் பெற்றுப் பரமகருணையினால் கோபுரத்தேறி ரஹஸ்யத்தை வெளியிட்டருளிய இடமாகிய கோஷ்டீபுரத்தில் பூர்வீகர்களால் எழுந்தருளப்பண்ணப்பட்டிருக்கும் விக்ரஹத்திற்கும் எத்துணை வேற்றுமை! ஷை ஸ்வாமிகள் செய்ய முற்பட்டிருக்கும் விபரீத கைங்கர்யம், உடையவர் திருவுள்ளத்திற்கும் ஸ்ரீ ஸௌம்ய நாராயணனது திருவுள்ளத்திற்கும் முற்றிலும் விரோதமானதாகும் என்பது அடியேனது அபிப்ராயம்; புராதன ஸத்ஸம்ப்ரதாய அறிஞர்களும் அவ்வாறே அபிப்பிராயப்படுவார்களென்று நினைக்கின்றேன்.

அஹோபில மடாதிபதிகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி அழகிய சிங்கர் ஸந்நிதியினின்றும் 'ஷை நூதன ப்ரதிஷ்டை செய்வது உசிதமன்று' என்று ஸ்ரீமுகம் பெற்று வந்தால், தாம் கொடுத்த அநுமதியை நீக்கிவிடுவதாக ஷை தேவஸ்தான தர்மகர்த்தா கூறியதன்மேல் ஷை ஏகாங்கிகளும் அவ்வாறே பெற்றுச் சென்றிருக்கின்றார். ஆதலால், சற்றுப் பெரிய வடிவுடையதாக எழுந்தருளப்பண்ணப்பட்டிருத்தலொன்று தவிர, ஏனைய எக்குறையும் சொல்ல இயலாத அழகுமிக்க புராதன விக்ரஹத்தை எடுத்துவிட்டு, பட்டர்களின் ஸௌகர்யம் ஒன்றையே உத்தேசித்து நூதன விக்ரஹத்தைச் செய்வித்து ப்ரதிஷ்டிப்பது உசிதமாகுமோ? என்பதைப் பகவத் ராமாநுஜ ஸித்தாந்திகளுள் எவரேனும் தக்க ஆதாரங்களுடன் இப்பத்ரிகை வாயிலாக க்ருபை கூர்ந்து உடனே தெரிவிக்குமாறு ப்ரார்த்திக்கின்றேன். இவ்விபரீத விஷயத்தை எவரும் அலக்ஷ்யமாகக் கருதிப் பேசாதிருந்து விடுவது முறையன்று என்பது பற்றி மட்டுமே, ஷை ஏகாங்கிகளிடமிருந்து எல்லா வித தக்க ஆதாரங்களையும் பெற்று, அவரது அநுமதியின் மேலேயே இதை விஜ்ஞாபித்துக் கொள்ள முன்வந்தேன்.

திருமகள் நிலயம்,
ஆரியூர், 16—2—29. } ஆ. வ. பத்மநாப ராமாநுஜதாஸன்.

---

## (2)
## விவாஹ விஷயம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

தத்காலம் ஸ்த்ரீகளுக்கு 14-வயதுக்குமேல்தான் விவாஹம் செய்விக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் அநேக கெடுதிகள் உண்டாகுமென்றும், சில ஸ்த்ரீகளும் சில புமான்களும் ஒரு மசோதா பிறப்பித்திருப்பதாகவும், அதற்கு நம் இந்திய தேசத்தில் பிறந்து, இந்து மதத்தில் வளர்ந்து, அதிலும் ப்ராஹ்மணர்களின் அநுஷ்டானத்தில் இருந்து வரும் சில சாஸ்த்ரஜ்ஞர்களும் அநுவாத பத்ரங்கள் அளித்திருப்பதாகவும் பத்ரிகை வாயிலாகத் தெரிகிறது. இவர்கள் கூறும் ஸ்ம்ருதி வசநங்கள் மிக ஸாமாந்யமானவை. அதிலும் இவர்கள் ஷை ஸ்ம்ருதிகளை ஆதியோடந்தம் பார்த்திருக்கவே மாட்டார்கள். அப்படிப் பார்த்திருந்தால்,

"ஆலைப்பலா வாக்கலாமோ அருஞ் சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீல நிறக்
காக்கைதனைப் பேசுவிக்கலாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்கலாமோ"

எனும் மூதறிஞர் மொழியை மறந்து இப்படிச் செய்வார்களா? இவர்கள், 'நாம் இவ்விதம் செய்யின் உலகத்துக்கு க்ஷேமம் ஏற்படுமோ, குறைவு ஏற்படுமோ? இதனால் எவரெவர்க்கு நன்மை? எவரெவர்க்குத் தீமை?' என்று நன்கு ஆராயாமலே இம் மசோதாவைக்கொண்டு வந்து விட்டார்களே! ஆனால் அவர்களிடமும் குற்றம் கூறுவதற்கில்லை. 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' எனும் பழமொழிப்படி உலகத்தில் இப்போது நாகரிகம் விஞ்சி 'இன்னார் தான் இன்ன வேலை செய்வது, இன்னார்தான் இன்னது சொல்வது' என்கிற நியமம் எல்லாம் ஒழிந்ததுடன், ஸத்வகுணமென்பதே துர்லபமாய்ப் போய்விட்டது. ஜாதிகளுக்குள் கலஹம் ஏற்பட்டு ஒருவர் மற்றொருவரை வாயில் வந்தபடி பத்ரிகைகளின் மூலமாகவும் உபந்யாஸ மூலமாகவும் திட்டத் துணிந்துவிட்டனர். உலகம் இப்போதிருக்கும் தன்மையை மட்டும் பார்த்து, தம் குலத்தின் பெருமையையே உற்றுணராமல், பல அறிவீனர்கள், தாங்கள் மஹா வித்வான்களென நினைத்து 'மிகைபடச்சொல்லேல்' எனும் முது மொழியையும் மறந்து, புராணாதிகளையும் பெரியோர்களையும் பற்பல விதமாகத் தூஷித்துவருகிறார்கள். அரசியல் நடத்திவரும் அரசாங்கத்தினரும் ஸ்ரீமதி விக்டோரியா மஹாராணியாரின் தீர்மானத்தை மறந்தோ, அல்லது யாது காரணத்தாலோ மத விஷயங்களில் தலையிட முடியாதென்று சொல்லுகின்றாரில்லை. ஆதலால் தான் இம்மாதிரியான மசோதாக்களை இவர்கள் தயாரித்து வருகின்றனரென்று நாம் துணிவாய்ச் சொல்வோம். மேலும் சிலர், ஸ்த்ரீகளுக்குப் பால்யத்தில் (5—6 வயதிலேயே) விவாஹம் செய்வித்து ஸ்த்ரீ புமான்களை இணைபிரியாமலிருக்கும்படி செய்யின், உலகத்தில் பெண்மக்களுள் வ்யபிசார தோஷம் ஏற்படாதாகையால், அவ்விதம், ஒரு சட்டமும் நிபந்தனையும் ஏற்படுத்த வேண்டியது அவச்யமென்று ஒரு மசோதா கொண்டுவரின் அதற்கு அரசாங்கத்தார் என் செய்வரோ தெரியவில்லை.

ஆகையால் சட்ட ஸபையிலிருந்து மந்த்ரி ஸ்தானம் வஹித்துவரும் மஹான்கள் தயைசெய்து சாஸ்த்ரங்களையும், மஹாராணியார் ஆர்டர் முதலியவைகளையும், தத்ஸமயம் உலகம் இருக்கும் தன்மையையும் நன்கு பராமர்சித்து, இம்மசோதாவை ரத்துசெய்யின் தாங்கள் பெரும் புகழ் அடைவதோடு உலகமும் க்ஷேமமுறும். அவரவர்கள் தத்தம் மதத்திற்கு உரிய ஆசாரங்களைத் தழுவி, அக்கோட்பாட்டின்படியே நடக்கவேண்டுமேயல்லாமல், இதற்காகக் கவர்ன்மெண்டார் எவ்வித தீர்மானமும் நிபந்தனைகளும் செய்ய முடியாவென்பதையும், இனி இம்மாதிரியான மசோதா மற்றும் வந்தால் அதுவும் அங்கீகரிக்கப்படமாட்டாதெனவும் அவர்கள் உறுதிசெய்துகொண்டால் உலகம் பெருங்கேட்டுக்கு உள்ளாகாமல் இருக்கும்; குடிகள் செழித்து ஓங்கும். நாடெங்கும் நன்றாக வாழ்வதனால் நம் அரசர்க்கும் அரசாங்கத்தினர்க்கும் மஹான்களுக்கும் பெரும் புகழும் க்ஷேமமும் உண்டாகும் என்பது திண்ணம்.

26-2-29. ஸ்ரீராமாநுஜன்.

(3)

## உபந்யாஸங்கள்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

புல்லாரண்ய மென்று சொல்லப்படும் ஸ்ரீ தர்ப்பசயநத்தில் ஸ்ரீ அஹோபில மடத்தில் முத்ரை கர்த்தாவாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாந வித்வான் தில்லையம்பூர் ஸ்ரீ வெங்கடாசார்ய ஸ்வாமியின் ப்ரதாந சிஷ்யரான ஏமப்பூர் கோவலகாசார்யர், புல்லாரண்ய வாஸிகளின் பெரு முயற்சியால் சுமார் நான்கு

மாத காலமாக உபந்யஸித்துவரும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில், சென்ற கார்த்திகை மீ 13௨ தில்லையம்பூர் ஸ்ரீ வெங்கடாசார்ய ஸ்வாமி ஸீதா கல்யாணத்தையும், 15, 16-ந் தேதிகளில் 'ஸ்ரீப்ரஹ்லாத சரித்ரம்' 'ஸ்ரீ விபீஷண சரணாகதி' என்னும் இரண்டு உபந்யாஸங்களையும் யாவரும் எளிதில் உணரும்படி வெகு விமர்சையாக நடத்தி யருளினார். அவற்றின் முடிவில், சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாரால் மாதந்தோறும் ப்ரசுரிக்கப்பட்டு வரும் 'ஸ்ரீ வேதாந்த தீபிகை'யின் அரும்பெருங் குணங்களை விஸ்தாரமாகக் கூறி, அப்பத்ரிகையை எல்லாரும் அவச்யம் ஆதரிக்க வேண்டுமென்று அழகாக உபந்யஸித்தார்.

விபவ ஹூ
தைமீ. 10௨

ஏ. கோஸகாசார்யன்.

(4)

## ஸ்ரீ கண்டர் காலம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

சென்ற கார்த்திகை மார்கழி மாதங்களில் ப்ரசுரமான பத்ரிகையில் 'ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீ கண்டாசார்யரும்' என்ற தலைப்பின் கீழ், ராமாநுஜ பாஷ்யம் முற்பட்டது ஸ்ரீகண்ட பாஷ்யம் பிற்பட்டதென்றும் கூறி, அதற்கு ஆதாரமாக இருவர் பாஷ்ய பங்க்தி முறைகளும் செம்மையாகக் காட்டப்பட்டு இருந்தன.

ஸ்ரீ ராமாநுஜர் காலத்தவரான கூரத்தாழ்வான், சோழன் ஸபையில் ஸ்ரீ வைஷ்ணவமதத்தை ஸ்தாபித்தபோது சைவ கக்ஷிகளைப் பூர்வ பக்ஷம் செய்திருப்பது யாவரும் அறிவர். அந்தக் கக்ஷிகள் ஸ்ரீ ஹரதத்தாசார்யர் செய்த, பஞ்சரத்ந நூலிலுள்ள, 'மாயஸ்ரீ வஹூஹவாக' என்கிற ச்லோகங்களின் தமிழ் மொழி பெயர்ப்பாகவே தெரிவதால் ஹரதத்தர் முற்பட்டவரெனத் தெரிகிறது. இவரால் ஸ்ரீகண்ட பாஷ்ய ஸமர்த்தநம் என்னும் க்ரந்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவதால் ஸ்ரீராமாநுஜரிலும் ஸ்ரீகண்டர் முந்தியிருக்கலாமென நினைக்கவேண்டி இருக்கிறது. இன்னும் ஸ்ரீகண்ட விஜயத்தில், சங்கராசார்யருடன் ஸ்ரீகண்டர் வாதிட்டு வென்றதாய்க் கூறப்பட்டிருக்கிறது. சங்கரர் ராமாநுஜருக்கு முற்பட்டவரென்பது நிராக்ஷேபமான விஷயம். அதனால் பார்க்குமிடத்து நீலகண்டர் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு எவ்வளவோ காலம் முற்பட்டவராய்த் தெரிகிறது. நீலகண்டர் ச்வேதமுனிவர் சிஷ்யர் என்றும், தேவீபாகவதம் பாரதம் முதலியவைகளுக்கு வ்யாக்யாநமும், ஸூத்ரபாஷ்யம் உபநிஷத் பாஷ்யம் சிவஞான போதமென்னும் ஆகமாந்த ஸூத்ர பாஷ்யமும் செய்து, பிறகு அவர் சிஷ்யர் ப்ரஹ்ம வித்யாதவரால், ஸ்ரீகண்ட பாஷ்யத்திற்கு தர்ப்பணமென்கிற வ்யாக்யாநமும், பிறகு ஹரதத்தரால் ஸ்ரீகண்ட பாஷ்ய ஸமர்த்தநமும் பின் நிஜ குண யோகீந்த்ரரால் தாராவளி யென்னும் வ்யாக்யாநமும் அதற்குப் பிறகே அப்பய்ய தீக்ஷிதரால் சிவார்க்கமணி தீபிகையும் செய்யப்பட்டதாய்த் தெரிகிறது.

தவிர, ஸ்ரீகண்ட பாஷ்ய ஸம்பந்தமான விஷயம், டங்கர் முதலிய வைஷ்ணவ மத ப்ரவர்த்தகர்களால் கூறப்பட்டிருக்கலாம் என்கிறார்கள். ஆதலால் இது விஷயத்தில் தகுந்த ஆராய்ச்சியை அறிய என் மனம் ஆவலுற்றிருக்கிறது. நிற்க: ஸ்ரீராமாநுஜர் நீலகண்டர் இவர்களைப் போல் விசிஷ்டாத்வைத பரமாக ஸ்ரீநிவாஸ பட்டர் என்பவர் லக்ஷ்மீ விசிஷ்டாத்வைத பாஷ்யமும் செய்திருப்பதாய்க் கூறுகின்றனர். அப்படி இருந்தால் அந்தப் பாஷ்யமும் முன் குறித்தவர்க்கு முற்பட்டதா? அல்லவா? அவருடைய பாஷ்யத்தில் நாராயண பரத்வம் த்ருப்தியா? இல்லையா? என்கிற இவ்விஷயங்களைச் சிறியேனுக்கு ப்ரமுகர் ப்ரஸாதிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாளிகை மேடு
பண்ணுருட்டி

வா. ஸீதாராமன்.
1-2-29.

(5)

## ஸ்ரீவித்யோல்லாஸ நீ ஸபா

ஸ்ரீ. உ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

சென்ற ஒரு வர்ஷ காலமாய்ப் பல பண்டிதோத்தமர்களின் அக்ராஸநப் பதவியின் கீழ் நடை பெற்று வந்த இந்த ஸபை மீண்டும் 30—12—28-ல் கூடியது. இதன் ஆதரவில் வி. ஆர். வி. கலாசாலை உபாத்யாயர் ஸ்ரீமாந் டி. ஆர். ஸுந்தர ராகவாசார்யர் அவர்கள் அக்ராஸநம் வஹித்தார். அவ்வமயம் ஷை கலாசாலையின் உபாத்யாயர்களும் மாணவர்களும் பல ஸம்ஸ்க்ருதாபிமாநிகளும் அவ்விடம் விஜயம் செய்திருந்தனர். மங்களாசரணமான பின்னர், ஸபையின் முந்திய மீட்டிங்கின் அறிக்கை படிக்கப் பட்டது. பின்பு ஸபையின் காரியதர்சியும், கலாசாலையில் ப்ரவேச வகுப்பில் [Entrance class] பயின்று வருபவனுமாகிய E. D. சடகோப ராமாநுஜன் என்னும் மாணவனால் வடமொழியில் "ஸமஸ்க்ருத பாஷா மஹத்வம்" என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. பின்பு மற்றையோர் அதே விஷயத்தை ஆதரித்துப் பேசினர். பின்பு கலாசாலாதிகாரி [Principal] ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் (சிரோமணி), ஸமஸ்க்ருத பாஷையின் மேன்மையைப் பற்றியும் மாணவர்கள் அதனைப் பயிலவேண்டிய முறையைப் பற்றியும் தெளிவுபட மொழிந்தார்.

அப்பால் அக்ராஸநர் கூறியதின் ஸாராம்சமாவது.-"இம்மாதிரி, நம்முடைய தாய்ப் பாஷையை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய விஷயத்தில் நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டு ஸபையை ஏற்படுத்தி, அதில் ஸம்ஸ்க்ருத உபந்யாஸங்கள் செய்துவருவது பற்றி யான் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். உலகின்கண் வழங்கிவரும் ஏனைய பாஷைகள் யாவும் நமது தாய்ப் பாஷையினின்று தான் உற்பத்தியாயின என்பதற்கு ஐயமே இல்லை. நம்மவர்களின் அச்ரத்தையால், இதனைப் பயிலும் தன்மை நம் சில நாடுகளில் அறவே நீங்கியது. நமக்குத் தெரிந்து நம் பூர்வாசாரியர்களான நிகமாந்த மஹா தேசிக ப்ரப்ருதிகள் இயற்றிய அத்புதமான பல கோசங்கள் கதியின்றி உயிர் நீத்தன. இந்தப்பாஷையின் மாஹாத்ம்யம் நமது தேசத்து உதித்தோர்க்கு எள்ளளவும் புலப்படாமைபற்றி நான் வ்யஸநிக்கிறேன். இன்றளவும் ஜெர்மனி தேசத்தில் சில ப்ராந்தங்களில் ஸம்ஸ்க்ருத பாஷா வ்யவஹாரம் செய்யப்பட்டு வருகின்றதென நாம் அறிகிறோம். சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமை அநேகமாய் நம் இந்தியாவில் இல்லையென எல்லோரும் அறிவர். அது போல் தற்சமயம் நமது தேசத்தில் போற்றப்பட்டு வரும் ஆங்கிலம் நீடூழி காலம் நிலைத்திருக்குமென யாம் எப்படி நிச்சயிக்க முடியும்? சிரபரிசயமே இவை எல்லாவற்றிற்கும் முதற்காரணம் என நீங்கள் அறிவீர்கள். சில நேயர்கள் ஆங்கிலம் கற்றல் பெரிய லாப ஹேது வென்று நினைக்கலாம். ஆங்கிலம் பயின்று ஆதரவற்றுக் கிடக்கும் பேர்கள் அநந்தமாக இருக்கின்றனர். அவ்வாறு இருந்தும், நம் தாய்ப் பாஷையைக் கற்கும் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாசாலை பிள்ளைகள் கற்க அஞ்சுகின்றனர். காரணம் யாதோ அறிகிலோம். ஆகைபால் இனியேனும் நீங்கள் இந்த விஷயத்தில் ச்ரத்தை எடுத்துக்கொண்டால், உங்கள் விஷயத்தில் ஜகத் காருணிகனான ஸர்வேச்வரன் அருள்புரிவான்" என்று உபந்யஸித்தார்.

பின்பு கத்ய பத்ய ஸுபாஷிதங்கள் வெகு விமர்சையாய்க் காநம் செய்யப்பட்டன. கடைசியில், ப்ரின்ஸிபால். டி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அக்ராஸநாதிபதியவர்கட்கு மாலை அணிந்து வந்தனம் கூறினர். ச்ரோதாக்கள் கர கோஷம் செய்தனர். மங்கள வாழ்த்துப் பாடலுடன் ஸபை கலைந்தது.

சென்னை
16—2—29 } ரங்கநாதன்,

ஸ்ரீ:

# புஸ்தக விமர்சம்.

## (1) ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்.

'ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம்' என்னும் பகவத் ஸ்தோத்ரத்தைச் சுத்தமாக அச்சுப் பதிப்பித்துத் தமிழ் அர்த்தத்துடன் வெளியிட்டிருக்கும் மணலூர் வீரவல்லி வித்வாந் ஸ்ரீ. உப. ராமாநுஜாசார்யர் என்னும் மஹாந், இந்தப் பதிப்பினால் நமது ஆஸ்திக ஜநங்களெல்லாருக்கும் பெரியதொரு உபகாரத்தைச் செய்திருக்கிறார். இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியால் ஜகத்தின் ச்ரேயஸ்ஸை உத்தேசித்து மஹா பாரதம் என்னும் இதிஹாஸத்தின் முகமாக வெளியிடப்பட்டது. பகவானிடத்தில் பக்தியுடன் இந்த ஸ்தோத்ரத்தை ஜபிக்கிறவர்களெல்லாரும் துக்கங்களிலிருந்து நீங்கினவர்களாய் ச்ரேயஸ்ஸுக்குப் பாத்ரமாகிறார்கள் என்று அம்மஹர்ஷியே அறுதியிட்டிருக்கிறார். நமது சாஸ்த்ரங்களில் விச்வாஸமுடைய ஆஸ்திகர்கள், இந்த ஸ்தோத்ர பாராயணத்தை ஸர்வ பலப்ரதமென்றே நம்பி, அநாதி காலமாக இதனை மிக்க பக்தி ச்ரத்தையுடன் ஆதரித்து வந்திருப்பதை எல்லாரும் அறியலாம். ஸ்ரீ சங்கராசார்யரும் ஸ்ரீபராசர பட்டார்யரும் இதற்கு விஸ்தாரமாகப் பாஷ்யம் செய்திருக்கிறார்கள் என்பதே இதன் அருமையை நன்கு விளக்குகின்றது. இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த க்ரந்தத்தை எல்லாருக்கும் ஸுலபமாகும்படி செய்து, அதனால் எல்லாருக்கும் உஜ்ஜீவனோபாயத்தை ஏற்படுத்துவதைக் காட்டிலும் வேறு பேருதவியும் உண்டோ?

இந்த ஸ்தோத்ரம் பல காலங்களில் பல பெயர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அவையெல்லாம் பெரும்பாலும் அச்சுப் பிழைகளாலும் அபசப்தங்களாலும் கலுஷிதங்களாக இருக்கின்றனவே தவிர சுத்தமாகக் காணப்படவில்லை. தவிரவும், அவை ஒன்றிலும் நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள பாஷ்யங்களொன்றும் சேர்க்கப்படவில்லை. இந்தப் பாஷ்யங்களில் நாமங்களின் அர்த்தம் விளக்கப்பட்டிருப்பதுடன், நமது சாஸ்த்ர ஸம்பந்தங்களான வேறு பல விஷயங்களும் ப்ரஸக்தி ஸம்பவிக்குமிடங்களில் ஸமக்ரமாக விசாரிக்கப்பட்டிருக்கின்றன. 'பகவத் குண தர்ப்பணம்' என்னும் பெயர் பூண்டிருக்கும் ஸ்ரீபட்டருடைய பாஷ்யம், உண்மையாகவே கண்ணாடிபோல் பகவத் குணங்களை நன்றாக ப்ரதிபலித்துக் காட்டுகின்றது என்பதை அதனைப் படித்தவர்கள் அறிவார்கள். கேவலம் பதங்களின் வ்யுத்பத்தி முதலியவற்றை மாத்ரம் அது விளக்குகின்றது என்பது இல்லை; பகவத் குணங்களையும் நன்றாக அநு

பவிக்கும்படி அது செய்கிறபடியாலன்றோ அதற்கு அப்பெயர் இடப்பட்டிருக்கின்றது. இந்தப் பாஷ்யத்திலும் ஸ்ரீ சங்கராசார்யருடைய ப்ராஷ்யத்திலும் விவரிக்கப்பட்டிருக்கிற ஸகல அருமையான விஷயங்களும் எளிய சுத்தமான தமிழில் மொழி பெயர்ப்பிக்கப்பட்டு இந்தப் புஸ்தகத்தில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இது, இந்தப் புஸ்தகத்துக்கு இருக்கும்படியான முக்ய பெருமை. மேலும் ஸ்தோத்ரத்தின் மூலமும் நாமாவளியும் இவை இரண்டும் க்ரந்த லிபியிலும் தமிழ் லிபியிலும் தனித்தனியாகப் பதிப்பிக்கப்பட் பட்டிருக்கின்றன. பஞ்சாயுத ஸ்தோத்ரமும் த்வாதசநாம பஞ்சரமும் அம்மாதிரியே இரண்டு லிபிகளிலும் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு, புஸ்தகத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா நாமங்களுக்கும் அகராதி ஒன்றும் இருக்கின்றது. இந்தப் புஸ்தகம் மொத்தம் முன்னூற்றுப் பதினாறு பக்கங்கள் அடங்கியுள்ளது. அச்சுப் பதிப்பு, பங்க்தி விபாகங்கள், புஸ்தகத்தின் அமைப்பு இவை யெல்லாம் அதிரமணீயங்களாக இருக்கின்றன. இதை வெளியிடுவதற்கு ஸ்ரீ ராமாநுஜாசார்யர் மிக்க ச்ரமத்தை எடுத்துக் கொண்டிருப்பதுடன், அதிகமான த்ரவ்ய வ்யயத்தையும் செய்திருக்கிறார் என்றே நாம் நினைக்கிறோம். நமது தேசத்திய ஆஸ்திகர்களனைவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் பாராயணாதிகளைச் செய்து தமக்கு ச்ரேயஸ்ஸைத் தேடிக் கொள்வதுடன், இப்படிப் பட்ட மஹோபகாரத்தைச் செய்த இம்மஹானுக்கும் தாம் அப்புஸ்தகத்தை வாங்கிக் கொள்வதனால் உதவி புரிவார்களென்று நாம் நம்புகிறோம். இதன் விலை ரூ. 2--8--0. அபேக்ஷிப்பவர்கள், 'சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கேசவப் பெருமாள் ஸந்நிதி வீதி, ஸ்ரீமான் எம். வி. ராமாநுஜாசார்யர்' என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த ஸ்ரீ ராமாநுஜாசார்ய ஸ்வாமியே, ஸ்ரீ ஸஹஸ்ர நாம மூலமொன்றையும் தேவ நாகர எழுத்திலும், க்ரந்த எழுத்திலும், தமிழ் எழுத்திலும் தனித்தனியாகப் பதிப்பித்திருக்கிறார். பாஷ்யப்பதிப்பில் போல இந்த மூலப்பதிப்பிலும், நாமங்களெல்லாம், பாஷ்யங்களில் உள்ளபடி நன்றாக ஆராய்ச்சி செய்யப்பட்டு, அவச்யமாயுள்ள குறிப்புகளுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 5.

---

### (2) விதவா வபந வித்வம்ஸநம்.

"ஹிந்து விதவைகள் தலை மயிரை நீக்க வேண்டுமா?" என்னும் விஷயத்தைப் பற்றிச் சென்ற புரட்டாசி மாஸத்திய தீபிகையில் வெளி வந்த வ்யாஸத்திற்கு ஸமாதானமாக, ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் இப்பெயருள்ள புஸ்தகம் வெளியிடப் பட்டு நமது பார்வைக்கு வந்துள்ளது. இதன் விலை அணா 4. இது கிடைக்குமிடம்:—"திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ஆபீஸ், 32, பந்தர் தெரு, மதிராஸ்."

115

ஸ்ரீ:

। ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ।

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்

ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।

அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்

ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# ஸம்பாதகீயம்.

‘வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம்’ என்னும் க்ரந்தம், மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் ஸ்ரீ உப. வே. தேசிகாசார்ய ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டுள்ள க்ரந்தங்களுள் ஒன்று. வ்யாஸ ஸித்தாந்த ‘ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியால் அநுக்ரஹிக்கப்பட்டிருக் மார்த்தாண்டம். கும் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் பரம தாத்பர்யம், ஸ்ரீமந் நாராயணனைப் பர தேவதையாக உடைய விசிஷ்டாத்வைதமே’ என்பதை இந்த க்ரந்தம் நிரூபிக்கின்றது. இதன் முதல் பரிச்சேதம் சற்றேறக்குறைய இரண்டு வர்ஷம் முன் வெளி வந்தது. இப்பொழுது மற்றை மூன்று பரிச்சேதங்களும் பூர்த்தி அடைந்து விட்டன.

ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு, ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீ பாஸ்கராசார்யர் ஸ்ரீயாதவ ப்ரகாசாசார்யர் ஸ்ரீராமாநுஜாசார்யர் ஸ்ரீமத்வாசார்யர் முதலிய அநேக ஆசார்யர்கள் விஸ்தாரமாகப் பாஷ்யங்களைச் செய்திருக்கிறார்கள். எல்லாரும், உபக்ரம உபஸம்ஹாரம் முதலிய ஆறு வித தாத்பர்ய லிங்கங்களையும் அவலம்பித்து ச்ருதி ஸூத்ர பலாபலங்களையும் கணிசித்து நிர்ணயங்களைச் செய்திருக்கிறபடியால், வேறு ஸாக்ஷ்ய மொன்றையும் அவலம்பியாமல் கேவலம் பாஷ்யங்களில் தென்படும் ந்யாய விசார மார்க்கத்தை மாத்

ரம் பராமர்சித்து, ஒருவர் சொல்லும் அர்த்தத்தை அஸாது வென்றும் மற்றொருவர் சொல்வதை ஸாது வென்றும் நிர்ணயம் செய்வது சக்யமில்லாமல் இருக்கின்றது. 'அப்படிப்பட்ட வேறு ஸாக்ஷ்யம் ஏதாவது உண்டோ?' என்பதை விசாரிக்க ப்ரவ்ருத்திக்கும் பொழுது, சிலர், 'இம்மாதிரி ஸந்தர்ப்பங்களில் மத்யஸ்தர்கள் சொல்லும் வார்த்தையே ப்ரமாணமாக வேண்டும். கீழ்க் கூறப்பட்டுள்ள பாஷ்யங்களொன்றிலும் ஸ்வபக்ஷத்வ அபிமானம் செய்யாமலிருக்கும் பூர்வ காலத்திய வேறு மத ஆசார்யர்கள், இது தான் வ்யாஸ மதம் என்று தமது க்ரந்தங்களில் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் அதையே வ்யாஸ தாத்பர்யமென்று நாம் க்ரஹித்துக் கொள்வது ந்யாய்யமாகும்' என்று ஒரு உபாயம் சொல்லுகிறார்கள். கபிலர் கணாதர் முதலிய பெரியோர்கள் தங்கள் தங்கள் மதத்தை ஸ்தாபநம் செய்வதற்காகப் பரமத நிராகரணம் செய்ய ப்ரவ்ருத்திக்கும் பொழுது, கேவல அத்வைதத்தையே வ்யாஸமத மென்று எண்ணி அதை அநுவதித்துக் கண்டித் திருக்கிறபடியால், அந்த அத்வைதத்தையே வ்யாஸருடைய மதமென்று நாம் க்ரஹிக்கவேண்டும் என்பது இவர்களுடைய வாதம். இம்மாதிரி வாதம் செய்து கொண்டு சில சாங்கரர்கள், கபில ஸூத்ரங்களையும் கணாத ஸூத்ரங்களையும் பல விடங்களில் பஹு ப்ரகாரமாக விசாரித்து, அவைகளில் அநுவாதம் செய்யப்பட்டுக் கண்டிக்கப்பட்டிருப்பவைகள் கேவல அத்வைதமே என்றும், ஆகையால் வ்யாஸருடைய தாத்பர்யமும் அந்த அத்வைத மதமாகவே இருக்கவேண்டு மென்றும் ஸ்தாபித்துச் சில புஸ்தகங்கள் எழுதி இருக்கிறார்கள்.

ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ வ்யாஸருடைய தாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்கு இம்மாதிரி மத்யஸ்தர்களுடைய வசநங்களைத் தேடிப்போவது அஸமீசீந மென்றும், அந்த ஸாக்ஷ்யங்களைக்காட்டிலும் பலவத்தரமான வேறு ஸாக்ஷ்யங்கள் இந்த விஷயத்தில் ஸுலபங்களாக இருக்கின்றன வென்றும், அம்மாதிரியான ஸாக்ஷ்யங்கள் துர்லபங்களாக இருக்குமிடங்களில் மாத்ரம் மத்யஸ்தர்களுடைய ஸாக்ஷ்யம் ந்யாயப்படி அங்கீகாரார்ஹமாகு மென்றும் ஆக்ஷேபித்து, ப்ரஸ்துத தாத்பர்ய நிர்ணயத்திற்கு அதிமாத்ரம் உசிதமான வேறொரு மார்க்கத்தை இந்தப் புஸ்தகத்தில் விவரித்திருக்கிறார். ஸ்வோக்தி

விரோதமின்றிக்கும் ஆர்ஜ்ஜவத்துடனும் பேசும் ஒருவனுடைய உக்திகளுள் சில வசநங்கள் அவிசதங்களாகத் தோன்றினல், அந்த அவிசதாம்சத்தின் அர்த்தத்தை மற்றை விசதமாயுள்ள அவனுடைய வசநங்களைக் கொண்டு நிர்ணயிப்பது உசிதமாகுமே தவிர, அவைகளின் அர்த்தத்தைப் பற்றி மூன்ருவது மனிதனைக் கேட்பது உசிதமாக மாட்டாதன்றோ? அது போலவே, ஒரு க்ரந்த கர்த்தா பல க்ரந்தங்களைச் செய்திருந்து, அவைகளுள் ஒரு க்ரந்தத்தின் தாத்பர்யம் ஸ்வல்ப ஸந்தேஹத்திற்கு ஆஸ்பதமானல், அந்த ஸந்தேஹத்தை அவர் எழுதியிருக்கும் மற்றை க்ரந்தங்களில் வெளி வரும் தாத்பர்யங்களைக் கொண்டு நிர்ணயிப்பது ந்யாயத்திற்கு ஒத் திருக்குமே தவிர, அந்த ஸந்தேஹாஸ்பத விஷயத்தைப் பற்றி மற்றவர் கள் என்ன சொல்லியிருக்கிருர்கள் என்பதைப் பார்த்து நிர்ணயம் செய் வது ந்யாயத்திற்கு ஒத்ததாக மாட்டாது. ஸ்ரீவ்யாஸர், ப்ரஹ்ம ஸூத்ரம் செய்ததுடன் மஹா பாரதத்தையும் செய்திருக்கிருர். ப்ர ஹ்ம ஸூத்ரங்களில் விசாரிக்கப்பட்டுள்ள விஷயத்திற்கு ஸம்பந்த மான விஷயமே மஹா பாரதத்திலும் பஹுவாக விசாரிக்கப்பட்டிருக் கின்றது. மஹா பாரதம், ஸூத்ரம் போன்ற தன்ருதலால் அதில் சொல்லப் பட்டுள்ள விஷயங்கள் தெளிவாகவும் விஸ்தாரமாகவும் சொல்லப்பட்டிருக் கின்றன. ஆகையால், ஸூத்ரங்களுடைய தாத்பர்யம் ஸந்தேஹத்திற்கு இடமானல், அந்த ஸந்தேஹத்தை மஹா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கும் அஸந்திக்தமான விஷயங்களைப் பார்த்து நிர்ணயிப்பதே ந்யாய்யமாகும். இம் மாதிரி ந்யாய விசாரம் செய்து, ஸ்ரீதேசிகாசார்ய ஸ்வாமி, மஹா பாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் மோக்ஷ ஸ்வரூபம் முதலியவற்றை அவலம்பித்து, ப்ரஹ்ம ஸூத்ரம் விசிஷ்டாத்வைத பரமே என்றும், அது ஸ்ரீமந் நாராயண பாரம்யத்தையே ப்ரதிபாதிக்கின்றதென்றும் இந்த க்ரந்தத்தில் நிஷ்க்ருஷ்ட மாக நிருபித்திருக்கிருர். இப்படிப்பட்ட அந்தரங்க ஸாக்ஷ்யம் பலவத்தர மாக இருக்கும் காலத்தில், அதை அநாதரித்துப் பஹிரங்கமாகிற மத்யஸ்தர் களின் ஸாக்ஷ்யத்தைத் தேடிப்போவது ந்யாய விருத்தமே யாகும்.

தவிரவும், கபிலர் முதலானவர்களால் அநுவதித்துக் கண்டிக்கப்பட் டுள்ளது அத்வைதமேயாயினும், அது வ்யாஸருடைய தாத்பர்யமென்று ஒரு

இடத்திலும் சொல்லப்படவில்லை. 'அப்படிச் சொல்லப்படாவிடினும், அந்த அத்வைதம் வ்யாஸ ஸூத்ரங்களில் எவ்விடத்திலாவது நிஸ்ஸந்தேஹமாகச் சொல்லப்பட்டிருந்தால் அதை வ்யாஸ தாத்பர்யமென்று ஒத்துக்கொள்ள வேண்டாவோ ?' என்னில், 'அப்படி ஒரு இடத்திலும் நிஸ்ஸந்தேஹமாகச் சொல்லப்படவில்லை' என்று ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமி, இந்த க்ரந்தத்தில் இதம் பரமாக ப்ரஹ்ம ஸூத்ரங்களெல்லாவற்றையும் விசாரித்து அவைகளின் அக்ஷர ஸ்வாரஸ்யங்களையும் கசடறப் பராமர்சித்து நிரூபித்திருக்கிறார். இம்மாதிரி இந்த ஸ்வாமி யுக்தி விசாரம் ந்யாய விசாரம் முதலியவைகளைச் செய்து இது விஷயமாக ஒரு க்ரந்தத்தை அநுக்ரஹித்தது, பகவத் ராமாநுஜனால் ஸ்தாபிதமாயுள்ள விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மிக்க உபகாரகமே. இம்மாதிரியே 'உபநிஷத் தத்வம்' என்று மற்றுமொரு க்ரந்தத்தை அவர் எழுதி வருகிறார் என்று நாம் அறிகிறோம். இவையெல்லாம் நம்மைப் போன்றவர்களின் பாக்யமென்பதில் ஆக்ஷேபமில்லை.

* * *

கந்யகைகளின் விவாஹச் சீர்திருத்தம்.

விவாஹச் சீர்திருத்த விஷயமாக நமது சீர்திருத்தக்காரர்கள் செய்து வரும் ப்ரயத்நம் மறுபடியும் தாத்காலிகமாகப் பங்கத்தை அடைந்திருக்கின்றது என்பதை நமது ஸுஹ்ருத்துக்கள் வ்ருத்தாந்தப் பத்ரிகைகளிலிருந்து அறிந்திருக்கலாம். பயங்கரமாக வரும் விபத் ஆத்யந்திகமாக நிவ்ருத்தமாகாவிட்டாலும் ஸ்வல்ப காலம் விக்நிதமாகி விளம்பிக்கும் பக்ஷத்தில், அப்படி விளம்பிப்பதும் கொஞ்சம் ச்ரேயஸ்கரமே. இன்னும் ஆறு மாஸங்கள் க்ரமித்த பிறகு இது சட்ட நிர்மாண ஸபையாருடைய ஆலோசனைக்கு மறுபடியும் வருகின்றது. அப்பொழுதாவது நமக்கு ஆநுகூல்யம் ஒருகால் கிடைக்கலாமோ என்னும் ப்ரத்யாசைக்கு ஹேது ஒன்றுமில்லை. ப்ரத்யுத ப்ராதிகூல்யமே ஸம்பவிக்கும் என்பதற்குப் பூயிஷ்டமான ஹேதுக்கள் இருக்கின்றன. ஆனால் நாளை வருவதை இன்று யார் சொல்லச் சக்தராவார்?

* * *

**பகவத் விஷயம்.**

ப்ரபந்ந ஜந ஸந்தாந கூடஸ்தரான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிரான் பிள்ளான் அருளிச்செய்த ஆறுயிரப்படி வ்யாக்யாநமும், வேதாந்தியான நஞ்சீயர் செய்தருளிய ஒன்பதினாயிரப்படி வ்யாக்யாநமும், பெரியவாச்சான் பிள்ளையின் திருக் குமாரராகிய நயினாராச்சானது சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாள சீயர் செய்தருளிய பன்னீராயிரப்படி வ்யாக்யாநமும், (மற்றை மூவாயிரங்களுக்கும் வ்யாக்யாநஞ் செய்தருளிய) பெரியவாச்சான் பிள்ளை திருவாய்மலர்ந்தருளின இருபத்து நாலாயிரப்படி வ்யாக்யாநமும், நஞ்சீயர் சிஷ்யரான நம்பிள்ளையினிடத்து வடக்குத்திருவீதிப் பிள்ளை கேட்டபடியே பட்டோலைகொண்டு அங்ஙனமே வெளியிட்டருளிய ஈடு முப்பத்தாறுயிரப்படி வ்யாக்யாநமும் ஆக ஐந்து வ்யாக்யாநங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் ஈடு முப்பத்தாறுயிரப் படிக்கு, அடையவளைந்தான் அரும்பதவுரை யென்றும், சீயர் அரும்பதவுரை யென்றும், இரண்டு அரும்பதவுரைகள் உண்டு. இவ்வாறு பெருமை பெற்ற பகவத் விஷயத்தை, ஸ்ரீ உப. சேட்லூர் க்ருஷ்ணமாசார்யர் என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியிருந்த ஒரு ஆஸ்திக சிரோமணியான தமிழ் வித்வாந், சற்றேறக்குறைய எட்டு வர்ஷங்களுக்கு முன் அச்சிடுவதற்கு ஆரம்பித்தார். ஐந்து பத்துக்கள் பூர்ணமாவதற்கு முன்னதாகவே ஸ்ரீ சரண்யன் அவரை இந்த விபூதியிலிருந்து தனது திருவடி வாரத்திற்குத் திருவுள்ளம் பற்றி விட்டபடியால், அது நடுவில் கொஞ்சம் விக்நிதமாக இருந்தது. அவருடைய புத்ரர், ஸ்ரீமாந் சே. பார்த்தஸாரதி ஐயங்கார் என்பவர், இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி அடைவிப்பதையே தமது தர்மமென்று உணர்ந்து, அதைமறுபடியும் ஆரம்பித்து நடத்திவருகின்றார். இப்பொழுது ஏழு பத்துக்கள் முடிந்து, எட்டாம் பத்து அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. கேவலம் கைங்கர்யமென்று எண்ணி இந்த ஜகதுபகாரத்தில் ப்ரவ்ருத்திக்கும் இவருக்கு அதிகப் பொருட் செலவு ஸம்பவியாமலிருக்கும்படி நமது ஆஸ்திக ஸுஹ்ருத்துக்களெல்லாரும் க்ரந்த பரிக்ரஹத்தால் உபகரித்துத் தாமும் க்ருதார்த்தராவார்களென்று நாம் நம்புகிறோம். புஸ்தகம் மிகவும் ரமணீயமாக அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் விலை ஸம்பந்தமான விஷயங்களை 'ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய புஸ்தக சாலை, 19 தென்னண்டை மாட வீதி, திருவல்லிக்கேணி, மதிராஸ்' என்னும் விலாஸத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

* * *

120



" ஸவஊ்ஷு—திஷந—ஶதம் ஷீ௱உவ்வ ஃகம்வ்யம் நாராயணாஹ்வயஶுரம்
க்ஷிவாநவஃ்ழ । ஸூக்தம் து வளரூஷஃஶெஷஜஶதுவிதும் " என்று
ஸ்ரீபுருஷ ஸூக்தத்தை, ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர், அது எல்லா வேதங்களிலும்
படிதமாக இருக்கிறதென்றும், அது ஸ்திரம் அப்ராகம்ப்யம்

**ஸ்ரீ புருஷ ஸூக்தம்.**

பகவானைப்போல தோஷகந்தமுமற்றதென்றும், அதில் ச்ருதிகளின் ஸாராம்சம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அசேஷ ஜகத்துக்கும் அதுவே பரிசுத்திகரமென்றும் இவ்வாறு பஹு ப்ரகாரமாகப் புகழ்ந்து பேசி இருக்கிறார். இம்மாதிரியே, " வெ஢ஷு வளரூஷம் ஸூக்தம் யஊஶாஹெஷு ஊநவழ । ஹாரதெ ஹமவதீதா வஹூாணெஷு அ வெஷ்ணவழ ॥ " என்று இதரர்களாலும் அது கொண்டாடப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட புருஷ ஸூக்தத்தை, பாச்சாத்ய பாஷையை அப்யஸித்த இக்காலத்திய ஸம்ஸ்க்ருத வித்வாந் ஒருவர், அது அத்யந்தம் அஸங்கதமான ப்ரலபிதமென்று தூஷித்திருக்கிறார். அது வேதங்களைச் சேர்ந்ததே அன்றாம்; அதில் வைதிக சிநஹங்கள் ஒன்றும் இல்லையாம்; அதில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள பதங்களும் வாக்ய ரசனையும் பிற்காலத்திய பரிபாகத்தை உடையனவாகத் தென்படுகின்றதாம்; உதாரமான அர்த்தா விஷ்கரணத்திற்குப் பதிலாகக் குத்ஸிதமான பாவங்களே அதில் ஏராளமாகக் காணப்படுகின்றனவாம். இம்மாதிரி, வி. கே. ராஜவாதி எம். ஏ. என்னும் ஒரு உத்தர தேசத்தியர், தாம் எழுதிவரும் 'வேத பதார்த்த ஸ்வாரஸ்ய விசாரம்' என்னும் க்ரந்தத்தில் ஸ்ரீ புருஷ ஸூக்தத்தைத் தூஷித்திருக்கிறார். 'மூகன் செய்யும் காநத்தைப் பதிரன் கேட்டு ஆநந்தித்தான்' என்னும் ரீதியில், இந்தத் தூஷணத்தை மற்றும் சில ஆதுநிகர்கள் அபிநந்தித்திருக்கிறார்கள். இவை யெல்லாம், பூனா என்னும் நகரத்தில் ப்ரசுரமாகி வரும் 'பண்டார்க்கர்' பத்ரிகையில் வெளிவந்திருக்கின்றன. இந்த ஸூக்தத்திற்குச் சாயநரால் செய்யப்பட்டிருக்கும் பாஷ்யம் முழுவதும் அபிநிவேசத்தால் செய்யப்பட்டிருக்கிறதாகையால், அது நிஷ்பக்ஷபாதிகளான வித்வாங்களுடைய அங்கீகாரத்திற்கு அத்யந்தம் அநர்ஹமாகிறதென்றும், தாங்கள் செய்யும் வ்யாக்யாநமே ருஜுவான வ்யாக்யாநமாகுமென்றும் இவர்கள் உத்கோஷிக்கிறார்கள். இதற்கு என்ன ப்ரத்யுத்தரம் சொல்லுகிறதென்று நமக்குத் தெரியவில்லை. வேத வாக்யங்களுக்கு அர்த்தம் செய்யும் விஷயத்தில் சில ந்யாய விசேஷங்களை அபிஜ்ஞர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை இவர்கள் கொஞ்சமேனும் அறியவில்லை என்றே நாம் நினைக்கிறோம். ஸ்வல்ப ஜ்ஞாநத்தை ஸம்பாதித்து அதனால் ஸ்தப்தர்களாயிருப்பவர்கள் விஷயத்தில் எவ்வித ஸமாதாநமும் பலவத்தாக மாட்டாதாகையால், 'இதுவும் கலியின் விடம்பநங்களுள் ஒன்று' என்று மாத்ரம் நினைத்து நாம் உபரதாகிறோம். " வியினெவ விஶெஷ ஶஹஉணீயঃ கஶடி க்ஷம் ஶடி கஷ்வாவஶாயঃ । ஸஹகாரதரள அகார யஷெ ஸஹவாஸம் ஸஶைத கொகிஶெத ॥ "

---